1st November 1958]

(*b*) The Government are watching the price trends and are constantly revising the position. The fair prices shop organization is kept intact on a small scale to meet any emergency. At present wheat is sold at fair price in these shops.

(*c*) Increase in prices during the present lean months is usual. Further with the sharp increase in food prices in North India, there has been a sympathetic trend in Southern States also.

* 790-H *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to curb the soaring prices of food and food articles in this State ; and

(*b*) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Increase in prices of foodgrains during the present lean months is usual. Further, recently the prices of foodgrains have gone up in North India and there has been a sympathetic trend in the prices in the Southern States also. The Government are carefully watching the situation. The fair price shop organization is kept intact on a small scale to meet any emergency.

MR. SPEAKER : It is now 10 o'clock and we have got about six more questions. We shall take five more minutes and dispose of them.

SRI K. VINAYAKAM : Sir, do the Government believe that there is reasonable possibility of bringing the prices down in the near future?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would not like to give any forecast about the future. But the Government are taking all possible steps to check the rise in the price.

SRI K. ANBAZHAGAN : தஞ்சை மாவட்டத்திலும் பிற இடங்களிலும் விலைவாசிகள்மட்டும் திடீரென்று 10 நாட்களுக்குள் உயர்ந்திருக்கின்ற காரணத்தினாலும், அவர்களுக்கு வரக்கூடிய வருமானம் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும், பல கிராமப் பகுதிகளில் மக்கள் உணவுப் பொருள்கள்கூட வாங்க முடியாமல் திண்டாடுகிறார்கள். இப்படி திடீரென்று ஏற்பட்ட விலைவாசி உயர்வைச் சமாளிக்க அரசாங்கம் என்ன செய்யப்போகிறது ? 10-00 a.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : திடீரென்று அதிகமாக விலை ஏறவில்லை. அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கக் கூடிய தகவல் அதுதான். இருந்தாலும் இது மாதிரி கிராமங்களில் இருப்பவர்களுக்கு அதிகக் கஷ்டம் இருப்பதாகத் தெரியவில்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இப்போது இருக்கும் விலையே விவசாயிகளுக்குக் கட்டுபடியாகவில்லையென்று விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை அரசாங்கம் அறியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது இருக்கும் விலை அதிகவிலை. அதிக விலையை கட்டுப்படுத்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் அபிப்பிராயம். ஓர் அளவுக்கு மேல் விலை குறைந்தால், அப்போது அரசாங்கம் தலையிட வேண்டியிருக்கும்.

[1st November 1958

SRI R. SRINIVASA IYER : தற்போது அறுவடையாகி யிருக்கும் குருவை நெல் 21 ரூபாயிலிருந்து குறைந்து 17 ரூபாயாக விற்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ? விலை குறைந்திருப்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறைந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. ரூபாய் 17 தான் என்று சொல்வதற்கில்லை. மாறிக் கொண்டேயிருக்கிறது. பதினேழு ரூபாயிலிருந்து 20 ரூபாய் வரை ஏறுவதும் குறைவதுமாக இருக்கின்றது.

SRI K. B. S. MANI : இந்த விலையேற்றத்தால், 10-ல் ஒரு பங்கு இருக்கும் மிராசுதார்களும், 10-ல் ஒரு பங்கு இருக்கும் விவசாயத் தொழிலாளர்களையும் தவிர, 10-ல் எட்டு பங்கு இருக்கக்கூடிய பாக்கி மக்கள் தான் அவதிப்படுகிறார்கள் என்பதை அரசாங்கம் அறியுமா ? இதை யொட்டி விலையேற்றத்தைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நிலச் சொந்தக்காரர்கள், குத்தகைக்காரர்கள், மற்ற விவசாயத் தொழிலாளர்கள் 10-ல் இரண்டு பங்குதான் இருக்கிறார்கள் என்று தஞ்சை ஜில்லாவிலிருந்து, அதுவும் கிராமப் பகுதியிலிருந்து வரக்கூடிய பிரதிநிதி சொல்வதை ஒப்புக்கொள்ள முடியாது. பெரும்பாலும் இந்த விலை விவசாயிகளை பாதிக்கிறது. விவசாயிகள்தான் கிராமங்களில் அதிகமாக இருக்கிறார்கள்.

SRI M. P. SARATHI : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது உடனடியாக விலை ஏறவில்லை என்று சொன்னார்கள். சென்ற வருஷம் அக்டோபர் மாத உணவு புள்ளிவிவரம் என்ன என்பதையும் இந்த அக்டோபர் மாதத்திய புள்ளி விவரம் என்ன என்பதையும் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சென்ற வாரத்தில் வட ஆற்காடு மாவட்டக் கலெக்டர் அவர்கள் சென்னைக்கு வந்திருந்தபோது அவரிடம் விசாரித்தேன். அரிசி விலை ரூபாய் ஒன்று, 15 அணா என்றுதான் இருக்கிறது. மற்ற விலைவாசிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ரொம்ப அதிகமாகப் போய்விட்டது என்று சொல்ல முடியாது.

SRI S. RAMAKRISHNA THEVAR : சபா நாயகர் அவர்களே, விலைவாசிகள் கட்டுப்பாடு கொண்டுவர வேண்டியது அவசியமெனக் கருதினாலும் விவசாயம் செய்வதற்கு வேண்டிய இதரப் பொருள்களின் விலை விஷம் போல ஏறுவதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது பொதுவான கேள்வி. இதற்கு விவரமாகப் பதிலளிக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை.

(Sri P. G. Karuthiruman was sitting in the Officials' Gallery and talking with the officials there.)

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, on a point of order. An hon. Member of this House is making noise from the Officials' Gallery. Will the Chair kindly ask him not to make noise?

MR. SPEAKER : (turning to the Officials' Gallery) : I do not think he is making noise. I think he can sit anywhere within this House.

1st November 1958]

SRI T. SAMPATH : May I know whether the Government have any intention of fixing floor and ceiling prices for not only paddy and rice but also other foodstuffs?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, Government have not taken any decision in the matter. Therefore, I am sorry I am not able to answer the question.

SRI T. KARIA GOUNDER : தலைவர் அவர்களே, உணவு விலைகள் உயர்ந்திருக்கிறது என்று கையைத் தூக்கி கேள்வி கேட்டார்கள் பல அங்கத்தினர்கள். உணவு உற்பத்தி செய்கிறதிலே ஏற்படுகிற செலவினைப் பார்த்து விவசாயிகளுக்குத் தனியாகச் சலுகை காண்பிக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது விவசாயச் செலவு அதிகமாகத் தான் இருக்கிறது. என்றாலும் இப்போது இருக்கின்ற விலைவாசியை கவனித்துப் பார்த்தால் விவசாயிகள் ஒன்றும் வருத்தப்படுவதற்கில்லை. சமாளித்து விடுகிறார்கள்.

SRI S. M. ANNAMALAI : இந்தக் கேள்வி ஒரு முக்கியமான கேள்வி. ஆகையால் இதற்கு அரை மணி நேரம் ஒதுக்கி விவாதிக்க அனுமதிக்க வேண்டுமென்று சபாநாயகர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : இப்போதே அதிகமான கேள்விகள் போட்டாகி விட்டது. இது வரை 20 உப கேள்விகளுக்கு மேல் போடப்பட்டிருக்கும். இன்னும் சில கேள்விகளுக்கு அனுமதிக்கிறேன். அரை மணி நேர விவாதம் தேவையில்லை என்று எண்ணுகிறேன்.

SRI S. M. ANNAMALAI : இது மிகவும் முக்கியமான ஒரு விஷயம். ஆகையால் தயவு செய்து அரை மணி நேர விவாதம் செய்ய அனுமதிக்கவேண்டுமென்று நான் மறுபடியும் கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : நேற்று கனம் அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் ? டில்லிக்குப் போய் எல்லா மாகாண மந்திரிகளுடனும் ஒரு கூட்டத்தில் பேசப் போவதாகவும், அதற்கு பிறகு வேண்டுமானால் இதைப் பற்றி இந்த சபையிலே விவாதிக்கலாம் என்றும் சொன்னார்கள். அதற்கு நான் ஒப்புக் கொண்டேன். இல்லை யென்றால் நேற்று அன்பழகனுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மேல் விவாதிப்பதற்கு ஒத்துக் கொண்டிருக்கலாமே ? இது வரைக்கும் 20 உப கேள்விகள் கேட்டாகி விட்டன. இன்னும் 5 கேள்விகள் கேட்க அனுமதியளிக்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த சமயத்தில் அறுவடைக்குப் பிறகு உணவுப் பொருள்களில் கணிசமான அளவு பாங்குகளில் அடமானம் வைக்கப்பட்டிருக்கின்றது. இதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தமிழ் நாட்டைப் பொருத்த மட்டில் அறுவடை செய்யப்பட்ட தானியங்கள் பதுக்கப் பட்டிருக்கிறது. பாங்குகளின் உதவி பெற்று விற்பனைக்கு வராமல் இருக்கிறது என்று சொல்வதற்கில்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : விவசாயிகள் சாகுபடி செய்வதற்கு முக்கியமாக வேண்டிய உரங்கள், பிண்ணாக்கு, சல்பேட் அம்மோனியா போன்றவைகளின் விலைகளெல்லாம் நாளுக்கு நாள் விஷம் போல ஏறுவதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அம்மோனியம் சல்பேட்டைப் பொறுத்தமட்டில் அதிக விலைக்கு அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து வாங்கினாலும் குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்கள். நான்

[1st November 1958

முன்பு கூறியது போல விலைவாசியைத் தடுக்க சில விஷயத்தில் தகுதியான ஏற்பாடு செய்ய முடியும். இப்போது இருக்கும் தானிய விலைவாசிகளைப் பற்றி உண்மையில் அதிகமாக விவசாயிகள் கவலைப்பட வேண்டியதில்லை.

Sri A. A. RASHEED: Is there any proposal to take punitive action against the hoarders and blackmarketers of foodstuffs?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: I may tell the hon. Member that so far as this State is concerned, we need not exaggerate this question of hoarding and blackmarketing. There is no such thing here.

Sri S. LAZAR: ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர், ஸார். இந்தப் பக்கத்தில் இருப்பவர்களுக்கு கைகளைத் தூக்கித் தூக்கி கைகளெல்லாம் வலியெடுத்துப் போய்விட்டது. சபாநாயகருடைய கண்ணைக் கவர முடியவில்லை. இதற்கு (to catch the Speaker's eye) சபாநாயகர் வேறு ஏதாவது ஒரு புதிய முறையை ஏற்படுத்தினால் சௌகரியமாக இருக்கும். (சிரிப்பு).

Mr. SPEAKER: எங்கேயும் இந்த முறைதான் இருக்கின்றது. உலகத்திலேயே இத்தனை நாட்களாக வேறு ஒரு புது முறையையும் கண்டு பிடிக்க முடியவில்லை. (சிரிப்பு.)

Sri K. S. G. HAJA SHERIFF: Sir, is it not a fact that one of the major reasons for the rise in prices is due to the heavy cost of production which has gone up very high? If so, will the Government consider the possibility of freezing the wages of labourers?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Sir, it is true one of the reasons for the rise in prices is the increase in the cost of production. Therefore, the other question does not arise.

Sri K. VINAYAKAM: ஸார், நம்முடைய அமைச்சர் டில்லிக்குப் போய் மற்ற மாகாண அமைச்சர்களோடு கலந்து பேசி விலை ஏறுமல் பார்த்துக் கொள்ள முடிவான திட்டம் செய்யும் வரையில் சென்னையில் விலை ஏறுமல் தடுக்க உத்திரவாதம் அளிப்பார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் அவர்கள் மிகுந்த அனுபவம் வாய்ந்தவர். அவர் குறிப்பாக ஏதாவது யோசனை சொன்னால் அதை நான் கவனிக்கிறேன். (சிரிப்பு.)

Sri R. CHIDAMBARA BHARATHI: உணவு உற்பத்தியில், முக்கியமாக நெல் உற்பத்தியில் ஆகும் செலவைப் பார்த்தால் நெல் விலை குறைவாக இருக்கிறது என்று கூறினார்கள். பிண்ணாக்கு, மற்றும் இதரப் பொருள்களின் விலை முன்பு இருந்த விலையைவிட இப்போது அதிகமாக இருக்கிறது என்று அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். விவசாயத்துக்கு வேண்டிய பொருள்களை குறைந்த விலைக்குக் கொடுக்க ஏற்பாடுகள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: விலைவாசி இருக்கும் நிலைமையில் விவசாயிகளுக்கு ஆகும் செலவு கட்டுப்படியாகிறது. இன்கம்-டாக்ஸ் என்று பயப்படுகிறார்கள். இப்போது கட்டுப்படியாகிறது என்று சொன்னேன். அம்மோனியம் சல்பேட் விலை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. மற்ற விஷயத்திலே எப்படிக் கட்டுப்படுத்துவது என்று பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது. விலை கொடுத்து வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு

1st November 1958]

விலை குறைக்கவேண்டுமென்று சொல்வதற்கும், விவசாயத்திற்கான செலவைக் குறைக்கவேண்டுமென்று சொல்வதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்கிறேன்.

SRI R. SWAMINATHA MERKONDAR: தலைவர் அவர்களே, தஞ்சை ஜில்லாவிலே பெரும்பாலான விவசாயிகள் நெல்லை விற்றுத் தான் தங்களுக்கு வேண்டிய இதர சாமான்களை வாங்கும் நிலையில் இருக்கிறார்கள். இதர சாமான்களின் விலை உயர்வைத் தடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது முக்கியமான முதல் பிரச்னை உணவு தானிய விலை ஏற்றத்தைத் தடுப்பதுதான். மற்ற சாமான்களின் விலையேற்றத்தைத் தடுக்க பிறகு தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். உணவு தானிய விலையேற்றத்தைத் தடுப்பதில் தான் முதலில் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

SRI V. SUBBIAH: இன்றைய விலைவாசிகளை எடுத்துக்கொண்டால், குறிப்பாக இரும்பு விலையை எடுத்துக் கொண்டால், 6 அணுவாக இருந்த கொழு 2 ரூபாயாக விற்கப்படுகிறது. 10 அணுவாக இருந்த மண்வெட்டி 3 ரூபாயாக விற்கப்படுகிறது. வண்டிக் கட்டு 7 ரூபாயாக இருந்தது, இப்பொழுது 70 ரூபாயாக விற்கப்படுகிறது. இதை எல்லாம் அரசாங்கம் கவனித்து விவசாயிகளுக்கு இவைகள் நியாயமான விலையில் கிடைப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ? விவசாய இரும்புக் கோட்டாவை அதிகப்படுத்தி நல்ல முறையில் வினியோகிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் கூறுவது உண்மைதான். இருந்தாலும் உணவு தான்யங்களின் விலையைக் குறைக்கவேண்டுமென்கிற அவசியத்தை மறுக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

Medicinal plants

* 790-I *Q*.—SRI M. C. MUTHUKUMARASWAMY: கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

சித்த-யூனனி-வைத்தியங்களுக் குகந்த உயர்ந்த பச்சிலைகள் பயிரிட அரசாங்கத்தார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU: The required plants are cultivated in the Medical Farm at Arumbakkam and also in a small garden in the compound of the College of Integrated Medicine.

SRI K. SATTANATHA KARAYALAR: சப்தகிரந்தா, அமிருத கிரந்தா போன்ற மூலிகைகளை, இரத்த அழுத்தத்திற்காக பென்சிலின் போன்ற anti-biotics-களுக்குப் பதிலாக உபயோகப் படுத்தலாமென்று மத்திய ஆராய்ச்சிக் கழகம் சிபார்சு செய்திருக்கிறது. ஆகவே, இவைகளைப் பயிரிடுவதற்குத் திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அவைகளையும் பயிர் செய்துக் கொண்டுதான் வருகிறோம். காட்டு இலாக்காவினரும் மற்ற இலாக்காவினரும் பயிர் செய்கிறார்கள்.

SRI M. D. THIAGARAJA PILLAI: சித்த வைத்தியம், யூனனி வைத்தியம் இவைகளுக்கு மூலிகைகள் முக்கியமானதாக இருப்பதனாலும், இவைகள் பயிரிடுவது குறைவாக இருப்பதனாலும், இது சம்பந்தமாக